**மே – 25**

# TNPSC துளிகள்

- நிதி ஆயோக் மற்றும் ஸுரிச்சைச் (சுவிட்சர்லாந்து) சேர்ந்த தொழில்நுட்ப நிறுவனமான ABB இந்தியா ஆகியவை நோக்க அறிக்கை ஒன்றில் (Statement of Intent - SoI) கையெழுத்திட்டுள்ளன. ரோபோடிக்ஸ், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களின் ஆற்றலைப் பயன்படுத்தி அதிகளவு பலனைப் பெறுவதில் இந்தியாவிற்கு உதவி புரிவதற்காக SoI கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இந்திய அரசு, நெதர்லாந்து மற்றும் சுவீடன் ஆகியவை HIV/AIDS மீதான முதல் கூட்டிணைவு ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கியுள்ளன.
- மத்திய பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு கொள்முதல் கழகக் (Defence Acquisition Council - DAC) கூட்டத்தில் பாதுகாப்பு கொள்முதல் செயல்முறைகளை எளிதாக்குவதற்கான பல்வேறு நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
  - DAC என்பது இந்திய ஆயுதப்படைகளின் (இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை) மூலதனப் பொருட்களின் கொள்முதல் மீது முடிவெடுக்கும் பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் அங்கமாகும்.
- உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின்படி, காடுகள் அழிப்பு மற்றும் பருவநிலை மாறுபாடு போன்றவற்றால் ஏற்படுகின்ற விலங்குகளின் இயற்கை வாழ்விட இழப்பு போன்ற மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட காரணிகள் கேரளாவில் சமீபத்திய நிபா போன்ற தொற்றுநோய்களின் பரவலுக்கு காரணமாக அமைந்துள்ளன.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதல் தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழகம்

- மத்திய அமைச்சரவை, இந்தியாவின் முதல் தேசிய விளையாட்டுப் பல்கலைக் கழகத்தை மணிப்பூர் மாநிலத்தின் இம்பாலில் (மேற்கு) அமைப்பதற்கான அவசரச் சட்டத்திற்கு முன்மொழிவு வழங்கியுள்ளது.
- இந்த அவசரச் சட்டமானது, தேசிய விளையாட்டுப் பல்கலைக்கழக மசோதா 2017ன் வரிசையில் கொண்டு வரப்பட்டுள்ளது. மக்களவையில் ஆகஸ்ட் 2017ல் கொண்டு வரப்பட்ட இம்மசோதா நாடாளுமன்றத்தில் நிலுவையில் உள்ளது.
- சிறப்புத்தன்மை வாய்ந்த இந்த பல்கலைக் கழகமானது இந்த வகையில் நாட்டின் முதல் பல்கலைக் கழகமாகும். மேலும் இப்பல்கலைக் கழகம் சிறந்த சர்வதேச செயல்முறைகளை ஏற்றுக் கொண்டுள்ளது.

National Sports University, Manipur

## விரிவான தொலைத்தொடர்பு மேம்பாட்டுத் திட்டம்

- மத்திய அமைச்சரவை வடகிழக்கு மண்டலத்தின் மேகாலயா மாநிலத்தில் கைபேசி சேவைகளை மேம்படுத்துவதற்காக விரிவான தொலைத் தொடர்பு மேம்பாட்டுத் திட்டத்தின் செயலாக்கத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்தத் திட்டம் அடையாளம் காணப்பட்ட கைபேசி சேவைகள் பெறாத பகுதிகளில் 2G மற்றும் 4G கைபேசி அடைவிற்கான விதிகளைக் கொண்டுள்ளதோடு, மேகாலயாவின் தேசிய நெடுஞ்சாலைகள் முழுவதும் தடையற்ற கைபேசி சேவையை வழங்கும்.
- இத்திட்டத்திற்கு உலகளாவிய சேவை உதவி நிதியத்தினால் (Universal Service Obligation Fund - USOF) நிதியளிக்கப்படுகிறது.
- USOF ஆனது ஊரகப் பகுதிகளில் தொலைத் தொடர்பு வசதியை மேம்படுத்தும் திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்டுள்ளது.
- இந்த நிதியத்திற்கான நிதியானது, உலகளாவிய அணுகல் வசூலில் (Universal Access Levy - UAL) இருந்து வருகிறது. தொலைத் தொடர்பு நிறுவனங்களின் பல்வேறு உரிமக் கட்டணங்களுக்கு அவர்கள் மீது விதிக்கப்படும் வரியின் குறிப்பிட்ட சதவீத பணமே UAL ஆகும்.

## சுகாதார அணுகல் மற்றும் தரக் குறியீடு

- 2016 ஆம் ஆண்டில், சுகாதார அணுகல் மற்றும் தரக்குறியீட்டில் (Healthcare access and quality – HAQ Index) 195 நாடுகளில் இந்தியா 145-வது இடத்தைப் பிடித்து, தன் அண்டை நாடுகளான சீனா, வங்கதேசம், இலங்கை மற்றும் பூடான் ஆகிய நாடுகளை விட பின் தங்கியுள்ளது.

| HAQ Rankings In South Asia | | | |
|---|---|---|---|
| Country | HAQ Index Score, 2016 | HAQ Index Rank, 2016 | Improvement In Score, 1990-2016 |
| India | 41.2 | 145 | 16.5 |
| Pakistan | 37.6 | 154 | 10.8 |
| Bangladesh | 47.6 | 132 | 29.8 |
| Afghanistan | 25.9 | 191 | 10.1 |
| Sri Lanka | 70.6 | 71 | 23.2 |
| Nepal | 40 | 149 | 19.1 |
| Bhutan | 47.3 | 134 | 27.2 |

Source: Global Burden of Disease study published in the *Lancet*

- கோவா மற்றும் கேரளா HAQ குறியீட்டில் 2016ஆம் ஆண்டில் உயர்நிலையில் உள்ளன. இரு மாநிலங்களும் 60 புள்ளிகளை விட கூடுதலாகப் பெற்றுள்ளன. அஸ்ஸாம் மற்றும் உத்திரப்பிரதேசம் ஆகியவை 40 புள்ளிகளுக்கும் கீழாகப் பெற்று குறைவான நிலையைப் பெற்றுள்ளன.
- இந்தக் குறியீடானது லான்செட் (Lancet) பத்திரிக்கையால் வெளியிடப்படும் உலகளாவிய நோய்களின் அதிகரிப்பைப் பற்றிய ஆய்வின் ஒரு பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது. உலகின் மிகப் பழமையான பத்திரிக்கைகளுள் ஒன்றான இது பெரிதும் அறியப்பட்ட சக மதிப்பாய்வு பொது மருத்துவ இதழ் ஆகும்.
- இந்த ஆய்வானது, HAQ அறிக்கையைப் பயன்படுத்தி உடல் ஆரோக்கியத்தின் தரம் மற்றும் அணுகலை, மரணத்திற்குக் காரணமான 32 காரணிகளின் அடிப்படையில் அளவிட்டது. இந்த காரணிகள், திறனான மருத்துவ பராமரிப்புடன் தடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.
- முதல் முறையாக, இந்த குறியீடானது, பின்வரும் ஏழு நாடுகளுக்குள்ளேயான பகுதிகளுக்கிடையேயான சுகாதார அணுகலையும் அதன் தரத்தையும் ஆராய்ந்துள்ளது.
- ஏழு நாடுகள் :
  1) பிரேசில்
  2) சீனா
  3) இந்தியா
  4) இங்கிலாந்து
  5) ஜப்பான்
  6) மெக்ஸிகோ
  7) அமெரிக்கா
- 2016ஆம் ஆண்டுக்கான HAQ குறியீட்டில் சுகாதார அணுகல் மற்றும் தரம் ஆகியவற்றில் உயர்ந்த அளவுகளைக் கொண்டுள்ள முதல் ஐந்து நாடுகளாவன:
  1) ஐஸ்லாந்து
  2) நார்வே
  3) நெதர்லாந்து
  4) லக்ஸம்பர்க்
  5) ஃபின்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா

## மாதிரி வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்த விவசாயச் சட்டம் 2018

- மத்திய வேளாண் மற்றும் விவசாயிகளின் நலன் அமைச்சகம், விவசாயிகளுக்கு நியாயமான விலையை உறுதி செய்வதற்காக மாதிரி வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்த விவசாயச் (விருத்தி மற்றும் எளிதாக்கல்) சட்டம் 2018-ஐ வெளியிட்டுள்ளது.



- இது, விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு உறுதிபடுத்தப்பட்ட சந்தையை உருவாக்குவதன் மூலம் விவசாயிகளின் இடர்களைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதே வேளையில் உற்பத்தித் திறன் மற்றும் விவசாய செலவு செயல்திறன் (Cost efficiency) ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலமாக வேளாண் வணிகம் மற்றும் உணவுப் பதப்படுத்துதலில் முதலீடுகளை ஊக்குவிக்கிறது.
- இந்த மாதிரி வரைவுச் சட்டமானது ஒப்பந்த வேளாண்மை மற்றும் சேவைகளுக்காக ஒழுங்குமுறை மற்றும் கொள்கைக் கட்டமைப்புகளை உருவாக்குவதற்கு முற்படுகிறது.
- இந்திய அரசியலமைப்பின் படி, விவசாயம் மாநிலப் பட்டியலில் இருப்பதால் இந்த வரைவு சட்டத்தின் அடிப்படையில் ஒப்பந்த வேளாண்மை மீது மாநில சட்டமன்றங்கள் சட்டத்தை இயற்ற முடியும்.
- இந்த மாதிரிச் சட்டமானது, வேளாண்மையை ஊக்குவித்து வேளாண்மைக்கான வசதிகளை ஏற்படுத்தித் தரும் ஒரு சட்டமே தவிர, அதன் கட்டமைப்பில் இது ஒழுங்குமுறை அமைப்பல்ல.
- இந்த மாதிரிச் சட்டம் வேளாண் பயிர்களில் ஒப்பந்த வேளாண்மையை மட்டும் உள்ளடக்காமல், கால்நடைகள், பால் பண்ணைகள், கோழிப் பண்ணை ஆகியவற்றின் உற்பத்திப் பொருட்களையும் உள்ளடக்கியது.
- ஒப்பந்த வேளாண்மை மற்றும் சேவைகளை கிராமங்கள்/பஞ்சாயத்து அளவில் ஊக்குவிப்பதற்காக இந்த சட்டம் ஒப்பந்த வேளாண்மை வசதியமைப்புக் குழுவை (Contract Farming Facilitation Group - CFFG) நிறுவுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## SCO மண்டல தீவிரவாத எதிர்ப்பு கட்டமைப்பு மாநாடு


- பாகிஸ்தான் முதல் முறையாக தீவிரவாத எதிர்ப்பு கட்டமைப்பு சட்ட வல்லுநர்களின் (Regional Anti-Terrorist Structure - RATS) மாநாட்டை இஸ்லாமாபாத்தில் நடத்தியது.




- பாகிஸ்தான், இந்தியாவுடன் சேர்த்து 2017 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஷாங்காய் கூட்டுறவு நிறுவனத்தின் (Shanghai Cooperation Organisation - SCO) நிரந்தர உறுப்பினரான பிறகு பாகிஸ்தானில் நடக்கும் முதல் SCO மாநாடு இதுவாகும்.
- இந்த மாநாட்டின் முக்கிய நிகழ்ச்சி நிரலானது, SCO மண்டலத்தின் தீவிரவாத அச்சுறுத்தல் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது என்பது தொடர்பாக விவாதிப்பது ஆகும்.
- மண்டல தீவிரவாத எதிர்ப்பு கட்டமைப்பானது (RATS) SCOவின் நிரந்தர உறுப்பு அமைப்பாகும்.
- RATS ன் தலைமையகம் உஸ்பெகிஸ்தான் நாட்டின் தாஷ்கண்ட்டில் அமைந்துள்ளது. RATSன் தலைவர் மூன்று ஆண்டு காலம் பதவிக் காலம் உடையவராவார். ஒவ்வொரு உறுப்பினர் நாடும், RATSக்கு நிரந்தர பிரதிநிதியை அனுப்புகின்றது.

## டிரக்கோமாவை அகற்றும் முதல் தென்கிழக்கு ஆசிய நாடு

- உலக சுகாதார நிறுவனம், கண்களில் தொற்றி பரவக்கூடிய பாக்டீரியத் தொற்றான டிரக்கோமாவை நேபாள நாடு ஒழித்திருப்பதாக மதிப்பிட்டுள்ளது.




- ❖ இதன் மூலம், கண்பார்வையிழப்பை ஏற்படுத்தும் உலகின் முன்னணி தொற்றாக கருதப்படுகிற டிரக்கோமாவை ஒழித்த WHOவின் தென்கிழக்கு ஆசிய மண்டலத்தின் முதல் நாடாக நேபாளம் உருவாகியுள்ளது.
- ❖ இந்த கண்நோயானது (டிரக்கோமா), 1980களில் நேபாள நாட்டில் தடுக்கக் கூடிய கண்பார்வையிழப்பை ஏற்படுத்தும் இரண்டாவது முன்னணி காரணியாகும்.
- ❖ டிரக்கோமா என்பது, க்ளாமைடியா டிராக்கோமேட்டிஸ் எனும் பாக்டீரியத் தொற்றால் ஏற்படும் கண்நோயாகும். இந்தத் தொற்றானது குறிப்பாக இளம் குழந்தைகளிடையே பொதுவாகக் காணப்படக்கூடிய ஒன்றாகும்.
- ❖ இந்தியா, 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் டிராக்கோமா தொற்றிலிருந்து விடுபட்டிருப்பதாக அறிவித்துக் கொண்டது. இந்த அறிவிப்பு WHOவின் GET 2020 (Global Elimination of Trachoma by the year 2020) திட்டத்தின் கீழ் WHOவினால் வரையறுக்கப்பட்ட டிராக்கோமா ஒழிப்பு இலக்குகளை இந்தியா அடைந்ததற்குப் பிறகு வெளியானது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## நடத்தை விதிமுறை மீறலை அறிக்கையிடும் செயலி

- ❖ இந்தியத் தேர்தல் ஆணையம் (Election Commission of India - ECI), 2019ஆம் ஆண்டின் மக்களவைத் தேர்தலை முன்னிட்டு பல மொழிகள் கொண்ட நடத்தை விதிமுறை மீறலை அறிக்கையிடும் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த செயலியானது, அரசியல் கட்சிகள், அவைகளின் வேட்பாளர்கள் மற்றும் செயல்பாட்டாளர்கள் (Activists) ஆகியோரின் முறைகேடுகள்/தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் தொடர்பான ஆதாரங்களை ECI உடன் நேரடியாகப் பகிர்வதற்கு நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு அதிகாரமளித்தலை நோக்கமாகக் கொண்டது.




- இந்த செயலியானது, தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் தொடர்பான புகைப்படங்கள், குறு கேட்பொலி (Short Audio) மற்றும் காணொளிப் பதிவுகள் (Video Clips) ஆகியவற்றை அந்தந்த இடங்களிலிருந்தே பகிர்வதற்கு அனுமதியளிக்கிறது.
- இந்த செயலியானது முதல் முறையாக, சமீபத்தில் நடந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக பெங்களூருவில் (கர்நாடக மாநிலத்தின் தலைநகரம்) அறிமுகப்படுத்தப்பட்டது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## இந்திய பத்திரிக்கை கழகத்தின் தலைவர்

- மத்திய அரசு, முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி C.K.பிரசாத் அவர்களை இந்திய பத்திரிக்கை கழகத்தின் (Press Council of India - PCI) தலைவராக நியமித்துள்ளது. இது அவருடைய இரண்டாவது பணிக்காலமாகும்.



- இவருடைய நியமனத்திற்கு, துணைக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவை தலைவராகக் கொண்ட மூன்று நபர் குழுவினால் அனுமதியளிக்கப்பட்டது.
- இவர், இதற்கு முன்னர் தலைவராக இருந்த நீதிபதி மார்கண்டேய கட்ஜீ பதவி விலகிய பிறகு நவம்பர் 2014ல் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- சட்டப்பூர்வ அங்கமான PCI, அச்சு ஊடகங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்கும் ஒரு கண்காணிப்பு அமைப்பாக செயல்படுவதற்கான கடமையைக் கொண்டுள்ளது. PCI யின் கடமைகள் பத்திரிக்கை கழகச் சட்டம் 1978ல் கொடுக்கப்பட்டுள்ளன.
- சட்டப்பூர்வமான, நீதித் துறையைப் போன்ற அதிகாரமுடைய (Quasi-Judicial) அங்கமான PCI, அச்சு ஊடகங்களுக்கான கண்காணிப்பு அமைப்பாக செயல்படுகிறது.
- இவ்வமைப்பு (PCI), ஒரு தலைவர் மற்றும் 28 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதன் தலைவர் வழக்கமாக உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாவார்.
- 28 உறுப்பினர்களில் 20 உறுப்பினர்கள் ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆவார். ஐந்து உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் இரு அவைகளிலிருந்தும் நியமிக்கப்படுகின்றனர். மற்ற மூன்று உறுப்பினர்கள் கலாச்சாரம், இலக்கியம் மற்றும் சட்டத் துறைகளைச் சேர்ந்தவர்களாவர்.

- - - - - - - - - - - - - - -